# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 13-12-2021 திங்கள் கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் 02/10/2021–ம் தேதிய கடிதம் ந.க.எண்.21787/2021/இஎ2–ல் குறிப்பிட்டுள்ள அளவுகோல் மற்றும் ஒப்பந்த ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் தேவைப்படும் பணியாளர்கள் விபரம் கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

FORMAT I

Calculation of needed workers according to present strength with norms

| Sl. No | Items | Requirement as per norms | Present strength | Balance needed |
|---|---|---|---|---|
| 1 | Wireman | 3 | 2 | 1 |
| 2 | Wireman helper | 3 | 1 | 2 |
| | Total | 6 | 3 | 3 |

மேற்படி படிவம் I- ல் குறிப்பிட்டுள்ளபடி பணியாளர்களுக்கான ஒரு நாள் ஊதியப் பட்டியல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**Format II**

| Sl. No | Details | Wireman | Wireman helper |
|---|---|---|---|
| 1 | Basic salary for one day | 708 | 556 |
| 2 | Service charge for the agency including the cost of uniforms and other safety items required to be given to the supplied man power(7%) | 49.56 | 38.92 |
| 3 | GST on basic salary of the man power and the service charge of agency (18% of 1 and 18% of service charge) | 136.36 | 107.08 |
| 4 | Employer contribution for EPS 8.33%, EPF 3.67%, EPF admin 0.5% and EDLI 0.5% | 92.04 | 72.28 |
| 5 | Employer contribution of ESI 3.25% | 23.01 | 18.07 |
| 6 | Total cost | 1008.97 | 792.35 |
| 7 | Deduction and remittance of the EPS, EPF, ESI,EPF admin ELDI( Sl.no.4+5) | 115.05 | 90.05 |

| | | | |
|---|---|---|---|
| 8 | Deduction and remittance of GST(sl.no.3) | 136.36 | 107.08 |
| 9 | Deduct ion of payment of employee(ESI-0.75%,EPF-12, Total- 12.75%) | 90.27 | 7.89 |
| 10 | Deduct 2% TDS from the total cost as indicated in Sl.no.6 | 20.17 | 15.84 |
| 11 | Service charges to the manpower supply agency | 29.39 | 23.08 |

Note: Wireman & Wireman Helper salary amount Rs.708/- & 556 provided in the DMA's Bid document Dated. 06.10.2021

வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் தேவைப்படும் பணியாளர்களை பணியமர்த்துவதின் மூலம் ஏற்படும் உத்தேச ஆண்டு செலவினம் விபரம் பின்வருமாறு

**Format – III**

**Cost Estimation for the workers for an year**

| Sl. no | Name of the post | Basic salary per day per person as per SOR or as approved in Rs. | Total salary per day per person Rs. | Total salary per month per person Rs. | Total salary per annum per person Rs. in lakhs | No.of person to be engaged | Total budget to be provided per year RS.in lakhs | Total value to be put into tender Rs.in lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | wireman | 708 | 1008.97 | 30269 | 3.633 | 1 | 3.633 | 3.633 |
| 2 | Wireman helper | 556 | 792.35 | 23721 | 2.853 | 2 | 5.706 | 5.706 |
| | | | | Total cost | | | 9.339 | 9.339 |

எனவே மேற்படி படிவம் III-ல் குறிப்பிட்டப்படி குழித்துறை நகராட்சிக்கு மின்கம்பியாளர் ஒருவர் மற்றும் மின்கம்பி உதவியாளர் இருவர் ஆகியோரை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் ஆண்டு ஒன்றிற்கு செலவினம் ரூ.9.339 இலட்சம் என்ற அளவு கோலின்படி மூன்று ஆண்டுகளுக்கு ரூ.28.017 இலட்சம் செலவினத்திற்கும் உரிய வழிகாட்டுதலின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்திக்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3804**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2</u>**

குழித்துறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குர் அவர்கள் 02.10.2021ம் தேதிய ந.க.எண்.21287/2021/EA2ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய

கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி தேவைப்படும் பணியாளர்கள் கீழ்கண்டவாறு.

**<u>அளவுகோல்களின்படி தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை</u>**

| வ. எண். | வகை | அளவுகோல்களின் படி தேவைப்படும் எண்ணிக்கை | தற்போது உள்ள எண்ணிக்கை | மீதம் தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மின்னாளர்-II | **2** | **0** | **2** |
| 2 | மின்னாளர்-III | **4** | **3** | **1** |
| 3 | மின்கண்காணிப்பாளர் | **1** | **0** | **1** |
| 4 | குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர் | **3** | 0 | **3** |
| 5 | பராமரிப்பு உதவியாளர் | **15** | **1** | **14** |
| 6 | துலக்குநர் | **1** | **0** | **1** |

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் போதுமான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்ய உரிய வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதன்பேரில் இந்நகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள மின்னாளர்-II 2 நபர்கள், மின்னாளர்-III 1நபர், மின்கண்காணிப்பாளர் 1 நபர், குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர் 3 நபர்கள், பராமரிப்பு உதவியாளர் 14 நபர்கள் மற்றும் துலக்குநர் 1 நபர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணிகளை மேற்கொள்ள ஆண்டு ஒன்றுக்கு ரூ.58.69 லட்சம் செலவாகும். குழித்துறை நகராட்சியில் 21 வார்டு பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிகளான (1).நீரேற்று நிலையத்தை இயக்கி பராமரித்தல், (2)குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்கி பராமரித்தல், (3)குடிநீர் வடிகட்டி படுகை இயக்கி பராமரித்தல் (4) குடிநீர் நீரேற்று நிலையம் இயக்கி பராமரித்தல், (5) மேல்நிலை தொட்டிகள், தரை மட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகள் (6) பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகளை திறம்பட செயல்படுத்தவும், மேற்காணும்படி கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களை

வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியில் ஈடுபடுத்தவும் இதற்கு ஒரு வருடத்திற்கான செலவினம் ரூ.58.69 லட்சம் நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியாளர்களை மின்னாளர்-II 2 நபர்கள், மின்னாளர்-III 1நபர், மின்கண்காணிப்பாளர் 1 நபர், குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர் 3 நபர்கள், பராமரிப்பு உதவியாளர் 14 நபர்கள் மற்றும் துலக்குநர் 1 நபர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்காகும் செலவினம் ரூ58.69 லட்சம் நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும், உரிய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. நகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணியினை வெளிக்கொணர்வு முகமை மேற்கொள்ள மின்னாளர்-II 2 நபர்கள், மின்னாளர்-III 1நபர், மின்கண்காணிப்பாளர் 1 நபர், குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர் 3 நபர்கள், பராமரிப்பு உதவியாளர் 14 நபர்கள் மற்றும் துலக்குநர் 1 நபர்களை வருடம் பணியில் ஈடுபடுத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

2. ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாளிலிருந்து ஒரு வருடம் காலத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.58.69 லட்சம் நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   ந.க.எண்.2319/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3805**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 02.10.2021ம் தேதிய ந.க.எண்.21287/2021/EA2ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl. No. | Items | Requirement as per norms | Present Strength | Balance needed |
|---|---|---|---|---|
| 1 | BOV | 15 | 9 | 6 |
| 2 | LCV | 7 | 2 | 5 |
| 3 | HCV | 2 | 3 | 0 |
| 4 | Tractor | - | - | 0 |
| 5 | Bobcat /JCB | 0 | - | 0 |
| 6 | Cleanliness Worker | 77 | 37 | 40 |
| 7 | Supervisor | 11 | 1 | 10 |
| 8 | Driver | 9 | 3 | 6 |
| | | | | 67 |

இதன்படி மேற்படி பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் ஓராண்டுக்கான உத்தேச செலவினம் பின்வருமாறு:

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs. | Total salary per day per person ( col No.3 * 1.4251) Rs. | Total salar y per month per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engaged | Total Budget to be provide d per year Rs in Lakhs | Total Value to be put in to tender Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | Sanitary worker | 461 | 557.22 | 16716 | 2.0 | 40 | 80.23 | 80.23 |
| 2 | supervis or | 448 | 638.44 | 19153 | 2.30 | 10 | 23.0 | 23.0 |
| 3 | Driver | 708 | 1008.97 | 30269 | 3.63 | 6 | 21.79 | 21.79 |
| Total | | | | | | | 125.02 | 125.02 |

எனவே குழித்துறை நகராட்சிக்கு தேவைப்படும் **தூய்மை பணியாளர்கள் 40 நபர்கள், மேற்பார்வையாளர்கள் 10 நபர்கள் மற்றும், ஓட்டுநர்கள் 6நபர்கள்** ஆகியோர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர்

அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச தொகை (125.02*3) **ரூ.375.06** இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

1) திடக்கழிவு மேலண்மை பணியின் முக்கியத்துவம் கொண்டு நிர்வாக அனுமதி பெற்று வெளிக்கெணர்வு முகமை மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும் இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேசசெலவு 375.06 இலட்சம் .செலவினத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3806**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்..4</u>**

ஒருங்கிணைந்த முறையில் கசடு கழிவு குடிநீர் சுத்திகரிப்பு திட்டம் (FSTP) செயல்படுத்திட குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கில் ரூ.340.00 இலட்சம் மதிப்பீட்டில் FSTP அமைக்கும் பணிக்கு 18-11-2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

1) திரு.டி. ஜஸ்டின்குமார், குழித்துறை
2) திரு.டி பிறேம்குமார், குழித்துறை

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதிக்கு என கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டதில் வரிசை எண்.2-ல் குறிப்பிட்டுள்ள திரு.டி. பிறேம்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியில் Turn over குறைவாகவும் கட்டிட பணியில் அனுபவம்

இல்லாமல் இருப்பதால் அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கப்பட்டது.

வரிசை எண்.1-ல் திரு.டி ஜஸ்டின்குமார் அவர்களது Price Bid 26-11-2021-ல் அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியலிடப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.90% அதிகமாக தொகை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள காரணத்தினால் அன்னாருக்கு விலை குறைப்பு செய்து தர கேட்டு கடிதம் 29-11-2021-ல் வழங்கப்பட்டதில் அன்னார் 30-11-2021-ல் விலை குறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளதற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் மதிப்பீட்டை விட 4.82% அதிகமாக விலைப்புள்ளி வழங்கியுள்ள அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு.- 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.2-ல் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளிக்கு LOA வழங்கி மதிப்பீட்டில் 1% கூடுதல் வைப்புத் தொகை வசூல் செய்த பின் வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3807**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 31-12-2021 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கில் 15-வது நிதிக்குழு மானியத்தில் Tied Grant 2021-2022-ம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் ரூ.34.00 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக 4 Ton Capacity கொண்ட Micro Compost Centre அமைக்க வேண்டியுள்ளது. பணியின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 15-வது நிதிக்குழு Tied Grant-ல் பணியினை மேற்கொள்ளவும் இப்பணிக்கென நிர்வாக அனுமதி, தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கவும், மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3067/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3808**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட புல எண்.B2/173-2-ல் திரு.D. பென்னட்சிங் என்பவருக்கு கட்டிடம் கட்ட வரைபட அனுமதி வழங்குவது தொடர்பாக ஆட்சேபனை வரப்பட்டதால், நகராட்சி வழக்கறிஞரிடம் சட்டக்கருத்து பெறப்பட்டது. சட்டக்கருத்து

வழங்கப்பட்டமைக்கு கட்டணமாக ரூ.1000/- வழக்கறிஞர் கோரியுள்ளார். எனவே இத்தொகை வழக்கறிஞருக்கு வழங்கும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - அனுமதிக்கலாம்.
BA.No.99/2020/ந.அ.ஆ.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3809**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகர புல எண்.A1/91pt, 92pt மற்றும் P3pt-ல் உள்ள 1.20 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.2427/.2019/திலிம3, நாள் 10-09-2019-ன்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இடத்தினை நில உரிமையாளர் திரு.V. ஜோஸ் என்வரால் நகராட்சிக்கு தானபத்திரம் எண்.515/2020-ன்படி பதிவு செய்து தரப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 3.96மீட்டர் அகலப்பாதை மற்றும் பொது உபயோகம் அதாவது பூங்கா அமைக்க பிளாட் எண்.9, 10-ல் கண்ட 319.85ச.மீ. மனையினையும் நகராட்சி ஏற்று எடுக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்
File No.1719/2017/TPI

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3810**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சி அம்மா உணவகத்தில் Billing Machine பழுது ஏற்பட்டு சரி செய்திட இயலாத நிலையில் இருப்பதால் புதிதாக Billing Machine வாங்கிடவும் உத்தேச செலவினமாக ரூ.20,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியத்தினை முன்னிட்டு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1281/2015/அ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3811**
**புதியதாக இயந்திரம் வாங்கப்பெறாமல் இயந்திரத்தில் உள்ள பழுது பணிகள் பார்க்க அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சி நகர்புற உள்ளாட்சித் தேர்தல் 2021-க்கு வாக்குச் சாவடிகளின் அமைவிடம், வாக்கு எண்ணும் அறைக்கான வரைபடங்கள் தயார் செய்த வகைக்கு நகரமைப்பு ஆய்வாளர் திருமதி. டெய்சி என்பவரால் ரூ.9,760/- செலவிடப்பட்டதாக செலவுப் பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.169/2019/அ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3812**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.B6-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.R. ரெத்தினகுமார் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.R.ரெத்தினகுமார் | 2014-2015 | B6 | 155000 | Page No.189, Sl.No.68 |

ந.க.எண்.1262/2021/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3813**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.A7, A7, B14 ஆகிய கடைகள் குத்தகைக்கு எடுத்துள்ள திரு.D. எலியாஸ் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.D. எலியாஸ் | 2012-2013 | A7, A7, B14 | 2,55,000 | Page No.181, Sl.No.18 |

ந.க.எண்.2503/2021/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3814**

**நிறுத்தி வைக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.B7-ஐ கடை குத்தகைக்கு எடுத்துள்ள திரு.V.D.S. அஷ்வின் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு. V.D.S. அஷ்வின் | 2017-2018 | B7 | 1,00,000 | Page No.235, Sl.No.130 |

ந.க.எண்.1545/2021/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3815**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.9</u>**

இந்நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணி செய்த திரு. ஆன்றணி (பாகோடு) என்பவர் பெயரில் குடிநீர் நிதியின் கீழ் பணி செய்ததில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.4000/- காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்ற அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 2885/2021/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3816**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.10</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75AL.6196-க்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற Derik Motors. நிறுவனத்தின் மதிப்பீடு ரூ.13,500/- க்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.3753, நாள் 29-10-2021-ன்படி ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி வாகனத்தின் பழுதினை சரி செய்த வகையில் ரூ.14,389/- வரப்பெற்றுள்ளது. ஆகவே அதிகமாக வரப்பெற்ற தொகையான ரூ.890/-ற்கு செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3817**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11</u>**

இந்நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணி செய்த திரு.எ. ஆன்றணி (பாகோடு) என்பவர் பெயரில் வருவாய் நிதியின் கீழ் பணி செய்ததில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.14,926/- காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்ற அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 2883/2021/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3818**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.12</u>

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பமின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 **(Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016)**விதி 5, துணை விதி (1) ன் மூலம் குழித்துறை நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக **(Electronic Service Delivery System)** அமைப்பின் கீழ் **https://tnurbanepay.tn.gov.in/** என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

மேலும் மேற்படி விபரங்களை நாளிதழில் விளம்பரம் செய்ய ஏற்படும் செலவுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| **வ. எண்** | **மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர்** | | | **சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி** |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணம்<br>*Payment for New Water Supply Connection* | |
| 2 | தடையின்மை சான்றுக்கானவிண்ணப்பம்<br>*Apply for NOC/ Clearance* | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>*Application for movie shooting* | |
| | | ii | குடிநீர்இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>*NOC for Water Connection (Industrial)* | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>*Movie Shooting Payment* | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>*NOC for Movie Shooting* | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>*Sanitary Certificate* | i | சுகாதார சான்றிதழ்<br>*Sanitation Certificate* | |
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>*Building Plan Work Progress* | |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>*Building Plan Work Progress last story* | |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>*Complete report for Tax Assessment* | |
| | | iv | மனைப்பிரிவுஅங்கீகாரகட்டணம்<br>*Layout Approval Payment* | |
| | | v | மனைப்பிரிவுஅங்கீகாரம்கோருதல்<br>*Layout Approval Request* | |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>*Notice for Commencement Work* | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>*Permission for Demolition for Building* | |
| | | viii | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br>*Planning Permission with Building License Payment* | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ix | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் *(12 மீட்டருக்குகீழ்)* *Planning Permission with Building License (Below12 mts)* | |
| | | x | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் *(1200 சதுரஅடிக்குகீழ்)* *Planning Permission with Building License (Below 1200 Sq.ft)* | |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு *Registration of Professionals/Developers* | நகராட்சி ஆணையாளர் |
| | | xii | தொழில் வல்லுநர்/டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு *Registration of Professional/Developers Certificate* | |
| | | xiii | கட்டிடவரைபடம்புதுப்பித்தல்கோரிக்கை *Renewal Building Plan Request* | |
| | | xiv | கட்டிடவரைபடம்புதுப்பித்தல்கட்டணம் *Renewal Building Plan Payment* | |
| | | xv | தொழில் வல்லுநர்கள்/டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு *Renewal Registration of Professional/Developer* | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை *Request for machinery License* | |
| 5 | வர்த்தக உரிமம் Trade License | i | தொழில் உரிமம் பதிவு - தேடல் *Trade Registration – Search* | |
| | | ii | தொழில் உரிமம் புதுப்பித்தல் - தேடல் *Trade Renewal - Search* | |
| 6 | சொத்து வரி Property Tax | i | வரிவிதிப்பு முழுவிவரம் *View Assessment History* | |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண *View Assessment* | |
| 7 | தொழில்வரி Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை *New Assessment request* | |
| | | ii | தொழில்வரிவிதிப்புக்கான கோரிக்கைமீள சமர்ப்பிப்பு *Return Submission* | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு Birth & Death | i | எனது சான்றிதழ் *My Certificate* | |
| 9 | சாலை துண்டிப்பு Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி *Road Cutting Permission* | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம் *Road Cutting Payment* | |

***அலுவலக குறிப்பு :*** *மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.*
***(ந,க.எண் :2909 /C1/2021***

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3819**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.13</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு செய்வதற்கு, குடிநீரில் குளோறினேஷன் செய்யப்பட்டு வருகிறது. தற்போது Liquid Chlorine இருப்பு குறைவாக உள்ளதால் குடிநீரின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு 30,000 லிட்டர் Liquid Chlorine வாங்கிட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.25 லட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
கோப்பு எண்.3048/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3820**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.14</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் வசிக்கும் நகர மக்களுக்கு நகராட்சி 4 எண்ணிக்கை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் குழித்துறை Zone மண்டலத்திலிருந்து குடிநீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. அவ்வாறு குடிநீர் வினியோகம் செய்யப்படும் பிரதான குழாய்களில் (Distribution Pipe) நீர்தேக்க தொட்டிகளுக்கு Filter House சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து Pumping Line மூலமாக தண்ணீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிராதான குழாய்கள் மற்றும் வினியோக குழாய்கள் Sulice valve, Air valve Public fountaion (PF) ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் பொதுமக்களுக்கு தடையின்றி வினியோகம் செய்ய ரூ.6.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அ.கு.- குடிநீர் வினியோகப் பணி அத்தியாவசிய பணி ஆகையால் மேற்படி பணியினை குடிநீர் நிதியில் செலவு செய்திடவுடம் மன்றம் ஒப்புகொள்ளலாம்.
கோப்பு எண்.3046/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3821**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரையுள்ள பகுதியில் வசிக்கும் நகரமக்களுக்கு நகராட்சி 4 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் (Marthandam Zone) மண்டலத்திலிருந்து குடிநீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. அவ்வாறு வினியோகம் செய்யப்படும் பிரதான குழாய்கள் (Distribution Pipe) நீர்த்தேக்க தொட்டிகளுக்கு Filter House சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து Pumping Line மூலமாக தண்ணீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிரதான குழாய்கள் மற்றும் வினியோக குழாய்கள் Sulice valve, Air valve Public fountaion (PF) ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வீணாகாதவாறு, பொது மக்களுக்கு தடையின்றி வினியோகம் செய்ய மதிப்பீடு ரூ.6.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். மேற்படி பணி அத்தியாவசிய பணி ஆகையால் குடிநீர் நிதியில் செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3047/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3822**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

குழித்துறை நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு ஆலம் தேவைப்படுவதால் மேற்படி பணிக்கு 28-12-2021-ல் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

1) திரு.எஸ். பாபு, ஒப்பந்ததாரர், கண்ணக்கோடு. - மதிப்பீட்டை விட 0.0% ரூ.1,60,000/-

2) திரு. அமிர்தராஜ், - மதிப்பீட்டை விட 9.38% அதிகம் ரூ.1,75,000/-
ஒப்பந்ததாரர்,

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ். பாபு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டிற்கு சமமான தொகை ஆகையால் அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.2738/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3823**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.17</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்வதற்கு சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள மின் மோட்டார்கள், சப்பாத்து நிலையத்திலுள்ள Submersible Motorகள் இடைக்குளம் நீரேற்று நிலையத்திலுள்ள Motorகள் மேலும் இதர உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளிலுள்ள மோட்டார்கள் ஆகியவைகள் பழுதினை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு செய்வதற்கு 14-12-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விபரம் கீழ்வருமாறு.

1) திரு.M. ஜாண்சன், -மதிப்பீட்டை விட 0.07% குறைவு
ஒப்பந்தகாரர், பாகோடு.

2) திரு.D. ஜெஸ்டின்குமார் -மதிப்பீட்டை விட 1.68% அதிகம்
ஒப்பந்தகாரர், குழித்துறை

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகக்கும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.M. ஜாண்சன் என்பவரால்

கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.07% குறைவாக கொடுத்துள்ளார். அன்னாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

கோப்பு எண்.1757/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3824**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவுக்கு தினசரி சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை R.R.C-யில் சேமித்து பின்னர் பேப்பர்மேன் கம்பெனிக்கு லாரியில் ஏற்றி விடுவதற்கு J.C.B. வாகனம் தேவைப்படுவதால் உள்ளூர் நிறுவனம் வழியாக J.C.B. வாகனம் வாடகைக்கு எடுத்து மேற்படி கழிவுகளை ஏற்றிச் செல்வதற்கு உத்தேச செலவினம் ரூ.2,00,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3056/2021/H1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3825**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவு பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் இருப்பு குறைவாக உள்ளதால் கிருமி நாசினி பொருட்கள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.3,00,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3055/2021/H1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3826**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.20</u>**

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவு பணிகளுக்கு கீழ்கண்ட பொருட்கள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.3,00,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | கருப்பு பினாயில் | - 300 லிட்டர் |
| 2) | வெள்ளி பினாயில் | - 300 லிட்டர் |
| 3) | ரப்பர் கை உறை | - 100 Nos. |
| 4) | ஒளிரும் சட்டை | - 100 Nos. |
| 5) | சோடியம் ஹைப்போ குளோரைட் | - 500 லிட்டர் |
| 6) | ஒரு தடவை பயன்படுத்தும் கையுறை | - 1000 Nos. |
| 7) | முக கவசம் | - 2000 Nos. |
| 8) | சானிடேசர் | - 50 லிட்டர் |

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3057/2021/H1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3827**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.21</u>**

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம் சம்மந்தமாக பொதுமககளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தியது, City Sanitation அறிக்கை தயாரித்தல், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு M.C.C. சம்மந்தமாக வரைபடங்கள் தயார் செய்து வழங்கிய வகைக்கு ரூ.11,890/- இந்நகராட்சி சுகாதார அலுவலரால் செலவிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2389/2017/அ1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3828**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.22**

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு கொசு மருந்து புகை தெளிப்பான் இயந்திரம் 2 எண்ணம் வாங்கி வழங்கிட 28-12-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு.

1) திரு.பி. ஜெயச்சந்திரன், ‘ ஒப்பந்தகாரர், சாலியன்விளை -மதிப்பீட்டை விட 0.14% குறைவு

2) திரு. அமிர்தராஜ், ஒப்பந்தகாரர், குழித்துறை - மதிப்பீட்டை விட 0.14% அதிகம்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.பி. ஜெயச்சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.14% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.2508/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3829**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23**

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN.74W.0236-க்கு 2021-2022-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய 28-12-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு.

1) கணேஷ் மோட்டார்ஸ், ‘ நாகர்கோவில் -மதிப்பீட்டை விட 4.32% குறைவு

2) மாதவா மோட்டார்ஸ், நாகர்கோவில் - மதிப்பீட்டை விட 5.08% அதிகம்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் கணேஷ் மோட்டார்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.32% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.2295/2018/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3830**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.24**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN.75M.4923-க்கு Timing chain உடைந்து வாட்டர் பம்பு மற்றும் எஞ்சின் ஹட் பழுதடைந்துள்ளதால் அதை சரி செய்ய 30-12-2021 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு.

1) கணேஷ் மோட்டார்ஸ், ‘ நாகர்கோவில். - தொகை ரூ.14100/-
2) மாதவா மோட்டார்ஸ், நாகர்கோவில். - தொகை ரூ.15700/-
3) அஷ்யா மோட்டார்ஸ், உண்ணாமலைகடை. - தொகை ரூ.13100/-

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அஷ்யா மோட்டார்ஸ் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணி ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.2295/2019/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3831**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.25</u>**

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN.75P.1813-க்கு Gear Box பழுதடைந்துள்ளதால் அதை சரி செய்ய 28-12-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு.

1) கணேஷ் மோட்டார்ஸ், ‘ -மதிப்பீட்டை விட 16.35% அதிகம் நாகர்கோவில்

2) அக் ஷ்யா மோட்டார்ஸ், - மதிப்பீட்டை விட 0.00% உண்ணாமலைகடை.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் அக் ஷ்யா மோட்டார்ஸ் என்பவரின் ஒப்பந்தப் புள்ளி மதிப்பீட்டிற்கு சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் அதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.2795/2017/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3832**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.26</u>**

குழித்துறை நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு Tied Grant-ன்கீழ் மார்த்தாண்டம் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தில் (Micro compost centre)-க்கு 7.5 HP Hydraulic bale press Machine வாங்கிட ரூ.6.10 இலட்சம் மதிப்பீட்டில் வேலைகள் மேற்கொள்ள 14-12-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு.

1) திரு.பி. ஜெயச்சந்திரன், ‘ - மதிப்பீட்டு விலை ஒப்பந்தகாரர், சாலியன்விளை

2) திரு. அமிர்தராஜ், - மதிப்பீட்டை விட 0.02% அதிகம் ஒப்பந்தகாரர், குழித்துறை

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.பி. ஜெயச்சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி

மதிப்பீட்டிற்கு சமமான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.2746/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3833**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.27</u>**

குழித்துறை நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு Untied Grant-ன்கீழ் வார்டு எண்.2-ல் அமைந்துள்ள பெருங்குளம் முதல் கழுவன்திட்டை வரை உள்ள ஹரிஜன் காலனி சாலையினை சரி செய்ய மதிப்பீடு ரூ.1.85 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 14-12-2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு.

1) திரு.கே. டேவிட், ஒப்பந்தகாரர், திருத்துவபுரம். -மதிப்பீட்டை விட 2.44% அதிகம்

2) திரு. அமிர்தராஜ், ஒப்பந்தகாரர், குழித்துறை -மதிப்பீட்டை விட 12.93% அதிகம்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.கே. டேவிட் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 2.44% அதிகமாக கொடுத்துள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.2604/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3834**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.28</u>**

குழித்துறை நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு Tied Grant-ன்கீழ் தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்திற்கு புதியதாக 3 எண்ணிக்கை கொண்ட 7.5HP with 700 LPMx40M Head உள்ள மின்மோட்டார்கள் வாங்கி பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்தில் 14-12-2021 அன்று

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு.

1) திரு.என். தாம்சன், -மதிப்பீட்டை விட 0.77% குறைவு
ஒப்பந்தகாரர், நட்டாலம்.

2) திரு.ஆர். சுரேஷ்ராஜ், -மதிப்பீட்டை விட 5.23% அதிகம்
ஒப்பந்தகாரர், பாகோடு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.என். தாம்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.77% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.2747/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3835**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண்.29**</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெருந்தெரு பகுதியில் விநாயகர் கோயில் சமீபம் உள்ள சிறுபாலம் (Culvert) TWAD Board மூலம் குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்காக உடைக்கப்பட்டு சரி செய்யாமல் மூடப்பட்ட நிலையில் மழைகாலங்களில் மழைநீர் கால்வாயில் செல்லாமல் சாலையில் வடிந்து செல்வது மட்டும் இல்லாமல் சாலை பழுதடைந்து இருப்பதின் காரணமாக மக்கள் அப்பாதைய பயன்படுத்துவதிலும் சிரமமாக உள்ளது. எனவே பழுதடைந்த சாலையை சரி செய்யவும் மழை காலங்களில் மழைநீர் சாலையில் வடிந்து செல்லாமல் மழைநீர் வடிகாலில் செல்லும் விதம் புதிய சிறுபாலம் கட்டுவதற்கும் ரூ.1.10 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது- தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.3064/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3836**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.30</u>**

குழித்துறை நகராட்சி அலுவலக வளாகத்தினுள் பாதுகாப்பு கருதி CCTV Camara வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது அவைகள் செயல்பாட்டிற்கு வந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகி விட்டபடியால் ஆணையரின் அறையில் உள்ள TV Monitor பழுதடைந்துள்ளதால் பல மோசடி காரியங்கள் மற்றும் இரவில் மனிதனின் நடமாட்டம் ஆகியவற்றை கண்காணிப்பதில் சில சிரமங்கள் உள்ளன. ஆகவே பழுதடைந்துள்ள மேற்கண்ட பொருட்களை சரிசெய்ய மதிப்பீடு ரூ.35,000/-த்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதை பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு MTL Computer Garden என்ற நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்து பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண். 3063/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3837**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.31</u>**

குழித்துறை நகராட்சி 2020-2021-ம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்ற போது தனியாக கணினி Ex-chairman அறையில் வைக்கப்பட்டு அதற்குரிய Internet connection எடுப்பதற்கு Cable, Jack, Mouse, Spike Microteck ஆகியவை வாங்கி பொருத்தியமைக்கும் மேலும் ஆணையர் அறையில் வைக்கப்பட்டுள்ள Camara பழுதடைந்துள்ளதால் அதற்குரிய Wireless mouse மற்றும் link cable மாற்றிய வகைக்கும் ரூ.2750/- அஸ்வின், கணினி நிறுவனத்திற்கு வழங்க வேண்டியுள்ளதால் அத்தொகையினை இந்நகராட்சி உதவி திட்ட அமைப்பாளரால் செலவு செய்யப்பட்டது. ஆகவே செலவு செய்யப்பட்ட தொகையினை உதவி திட்ட அமைப்பாளர் திருமதி.ஜி. மேரிநிர்மலா என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண். 3062/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3838**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.32</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் அறையில் Air Conditioner (AC) பழுதுபட்டுள்ளதால் அதனை சரி செய்த வகைக்கு ரூ.2200/-ஐ மின்கம்பியாளர் திரு. ராஜேந்திரன் என்பவரால் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2989/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3839**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.33</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான MCC-ல் சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகள் உரமாகக்கப்பட்டு சுமார் இரு ஆண்டுகளாக சேகரமாகியுள்ளது. அத்தகையை உரங்களை JCB மற்றும் Tipper வாகனம் மூலம் அப்புறப்படுத்திடவும் உத்தேச செலவினம் ரூ.100000/- (ஒரு இலட்சம்) ஆகும் என சுகாதார அலுவலரால் அறிக்கை சமர்ப்பித்துள்ளதின் அடிப்படையில் உரங்களை அகற்றிட ஏற்படும் செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.95/2022/H1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3840**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.34</u>**

ஒருங்கிணைந்த முறையில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டம் (FSTP) 2018-2019 நகராட்சியால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி

அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் மாநில அளவிலான தினசரி பத்திரிகையில் விளம்பரம் செய்திட (1) மாலை மலர் பத்திரிகை (2) Times of India ஆகிய இரண்டு பத்திரிகைக்கும் 25-10-2021-ல் Flame Advertising company private Limited மூலம் விளம்பரம் செய்த வகையில் ரூ.43,260/- வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.819/2019/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3841**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/- திருமதி.க. ராமதிலகம்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
குழித்துறை நகராட்சி

/.உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி,